தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண்.039965/டபிள்யு2/இ3/2019 நாள் 21.11.2022

பொருள்: தமிழ்நாடு மேல்நிலைக்கல்விப்பணி - அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகள் - 2022-2023ம் கல்வியாண்டில் - 11 மற்றும் 12ம் வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் - கூடுதல் முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் அனுமதித்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை: 1)சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட 2022-2023ம் கல்வி ஆண்டிற்கான பணியாளர் நிர்ணயம் சார்ந்த கருத்துருக்கள்
2) தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண் 039965/டபிள்யு2/இ3/2019, நாள் 18.08.2022.

--------

அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் 2021-2022ம் கல்வியாண்டில் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டதில் ஆசிரியரின்றி உபரியாகக் கண்டறியப்பட்ட முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் பள்ளிக் கல்வி ஆணையரின் பொதுத் தொகுப்பிற்கு ஈர்த்துக் கொள்ளப்பட்டு பார்வை 2ல் காண் செயல்முறைகள் வாயிலாக ஆணை வழங்கப்பட்டது.

அவ்வாறு பள்ளிக் கல்வி ஆணையரின் பொதுத் தொகுப்பில் உள்ள 254 முதுகலை ஆசிரியர் (Surplus without person) பணியிடங்களை 11 மற்றும் 12ம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் கோரி சம்பந்தப்பட்ட மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு 254 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் தேவையுள்ள பள்ளிகளுக்கு(தமிழ் - 33, ஆங்கிலம்-2, கணிதம் - 51, இயற்பியல் - 50, வேதியியல் -58, வரலாறு - 18, வணிகவியல்-4, பொருளியல் -38) அப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலனை கருத்தில் கொண்டு கூடுதலாக அனுமதித்து ஆணை வழங்கப்படுகிறது.

புதியதாக அனுமதிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்களை சார்ந்த பள்ளியின் அளவுகோல் பதிவேட்டில் (Scale Register) பதிவுகள் மேற்கொண்டு பராமரிக்குமாறு சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு – அனுமதிக்கப்பட்ட 254 கூடுதல் பணியிட விவரம்

ஆணையருக்காக

பெறுநர்

சம்பந்தப்பட்ட பள்ளித்தலைமையாசிரியர்கள்.

நகல்: சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்

நகல்: சம்பந்தப்பட்ட மாவட்டக்கல்வி அலுவலர்கள்